1970 ஜனவரி 24]

எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்காமல் அதற்குக் குறைவாகப் படித்த வர்கள் இரண்டாம் நிலை ஆசிரியர்களாகத் தகுதியைப் பொறுத்த வரையில் கருதப்படுகிறார்கள்.

Underground drainage system in Vellore

* 72Q.—THIRU M. P. SARATHI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the present stage of the scheme for the provision of under ground drainage system in Vellore Municipality?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேலூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. பா. சாரதி : வேலூர் நகராட்சி, சாதாரண சிறு சிறு டிச்சஸ் கட்டுவதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. அதை உத்தேசித்து அங்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாக, அது பெரிய நகராக இருக்கும் காரணத்தால், எடுத்துக் கொள்ளும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது உத்தேசமில்லை என்று சொன்னேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 12½ கோடி ரூபாய் தான் நீர் வழங்கும் திட்டத்திற்கும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏற்கனவே செய்து கொண்டு வருகிற பகுதிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். புதிதாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். நான்காவது திட்டக் காலத்தில் குறிப்பிட்ட சில நகரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்திட்டத்தில் வேலூர் நகரம் வரவில்லை. பிறகுதான் அது கவனிக்கப்பட வேண்டும்.

திரு. நா. வீராசாமி : வேலூர் நகரம் வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராக இருக்கிறது. அங்கு ஸி.எம்.ஸி. ஹாஸ்பிட்டல் இருக்கிறது. அகில இந்தியாவிலிருந்தும் அங்கு நோயாளிகள் வருகிறார்கள். அதில்லாமல், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் போன்ற முக்கியஸ்தர்கள் எல்லாம் அடிக்கடி அங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நகரத்தில் பாதாளச் சாக்கடை இல்லாமல் அதன் சுகாதாரம் கெட்டுப் போகிறது. ஆகவே அரசு இதைத் தனியாகப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான்காவது திட்டத்தில் திருச்சி, திருநெல்வேலி, கடலூர், காஞ்சிபுரம், சேலம் போன்ற பெரிய நகரங்கள்தான் இருக்கின்றன. நிதி வசதி ஏற்படும்போது வேலூர் கவனிக்கப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அனுமதி தராவிட்டாலும் அவ்வப்போது பெரிய, பெரிய மேஸனரி டிச்சஸ் கட்டுவதற்கு உடனடியாக அனுமதி வழங்குவதற்கு

ஏற்பாடு செய்யப்படுமா? ஒவ்வொன்றுக்கும் சென்னைக்கு வந்து ஸானிட்டரி என்ஜினியர் அவர்களிடம் உத்தரவுகள் பெற வேண்டியிருப்பதால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே வேலூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மேஸனரி டிச்சஸ் கட்டிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: வேலூர் நகரத்தைப் பொறுத்தவரையில் 68-ம் ஆண்டில் ஆணையர் ஒரு திட்டத்தை அனுப்பி பாதாளச் சாக்கடை கட்டுவதற்கான திட்டத்தை ஆராயும்படி தலைமைப் பொறியாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். பொறியாளர் அவர்கள் அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். வேறு வகையில் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்றால் வேலூர் நகராட்சி, முறைப்படி விண்ணப்பித்துக் கொள்ளுமானால் அதைப் பரிசீலித்து, செய்யக்கூடியதைச் செய்ய முயலலாம்.

Science Laboratories for evening College students

* 73 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the **Minister** for Education and Health be pleased to state—

(a) whether the Government propose to utilise the Presidency College Science Laboratories for evening College students;

(b) whether the Government have received any petition of grievences from the students of the Evening College; and

(c) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) & (உ) சென்னை, அரசினர் கலைக்கல்லூரியிலாவது அல்லது சென்னை மாநிலக் கல்லூரியிலாவது, இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களை முக்கிய பாடமாகக் கொண்ட பி.எஸ்.சி. பட்டப்பாட முறையைத் துவக்குமாறு வேண்டி, சென்னை கலைக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள மாலை நேர வகுப்புகளில் பயிலும் 3 மாணவர்களிடமிருந்து 1968 ஜூன் திங்களில் மனு ஒன்று பெறப்பட்டது. சென்னை, அரசினர் கலைக் கல்லூரியில் நடைபெறும் மாலை நேர வகுப்புகளில் பௌதிகத்தை முக்கிய பாடமாகக் கொண்ட பி.எஸ்.சி. பட்டப் பாட முறை 1969–70-ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், மாலை நேரக் கல்லூரிகள் சென்னையில் மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். இந்த ஏற்பாட்டை, நெல்லை, மற்றும் மதுரை போன்ற முக்கிய மாவட்டத் தலைநகரங்களில் செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சென்னையிலே ஏற்பாடு செய்திருப்பது போன்று, முக்கியமான மாவட்டங்களின் தலைநகரங்களில் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அரசு இதுபற்றி பல்கலைக் கழகத்